அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 12/2005 (VII)

எனது இலக்கம் : EST-6/04/INS/1010

அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.10.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**2005 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட அரசாங்க அலுவலர்களுக்கான புதிய காப்புறுதி திட்டத்தினை தாபித்தல் (அக்ரஹாரா)**

2016.04.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2005 (VI) இன் பால் தங்களது அவதானத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. அதன் 04 ஆம் பந்தி மற்றும் 4:4 ஆம் உப பந்தியினை பின்வரும் வகையில் திருத்தியமைப்பதற்கு 2017 ஆம் வரவுசெலவுத் திட்டத்திற்கு ஏற்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

> 04. ஓய்வூதியம் பெறும் அரச அலுவலர்கள் வயது 70 இனைப் பூரணப்படுத்தும் வரை ரூபா. 200/- இனை மாதாந்த பங்களிப்பாகவும் வயது 70 இனைக் கடந்தவர்கள் ரூபா. 600/- இனை மாதாந்த பங்களிப்பு என்ற அடிப்படையில் அறிமுகப்படுத்தப்படும் "அக்ரஹார காப்புறுதி" உத்தேச திட்டம் பின்வரும் நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு இணைப்பு 04 இல் காட்டப்பட்டுள்ள நலன்கள் தொடர்பாக வலுவிலிருக்கும்.
>
> 4:4 ஆயுள் காலம் வரை நலன்களுக்கு உரித்துடைமை கிடைக்கப்பெறும்.

03. மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக 2016.05.31 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் 04/2016 இற்கு உரித்துடைய வகையில் எதிர்வரும் காலங்களில் திருத்தியமைக்கப்படும்.

04. இந்த சுற்றறிக்கை பொதுச் திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு